பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**11 08 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** தீர்ப்பாய சீர்திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்ற இரு அவைகளின் ஒப்புதலும் கிடைத்துள்ளது.

**2)** எல் — நினோ வெப்ப தாக்கத்திலிருந்து விவசாயத்தை பாதுகாக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கை எடுத்து வருவதாக வேளாண் இணையமைச்சர் திரு. ராம்நாத் தாகூர் தெரிவித்துள்ளார்.

**3)** அருணாச்சலப்பிரதேசம் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

**4)** பலுசிஸ்தான் சுதந்திரத்தை சர்வதேச சமுதாயம் அங்கீகரிக்க வேண்டும் என்று பலோச் அமைப்பின் தலைவர் திரு **Mir Yar Boloch** வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**5)** கஜகஸ்தான் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne,** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

தீர்ப்பாய சீர்திருத்த மசோதாவுக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதலும் கிடைத்துள்ளது.

மக்களவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள இந்த மசோதாவை இன்று சட்டத்துறை அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால் மாநிலங்களவையில் தாக்கல் செய்தார்.

இம்மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசிய திரு அர்ஜுன் ராம் மெக்வால், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு தீர்ப்பாயங்களை ஒழுங்குபடுத்துவதற்கு தொடர் முயற்சிகளை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

இதன்மூலம் கொண்டுவரப்பட உள்ள சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, நவீன மற்றும் சுதந்திரமான, சீரான தீர்ப்பாய கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நிர்வாகத்தை வலுப்படுத்துவதோடு வெளிப்படைத் தன்மையும், திறனும் மேம்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

தேசிய தீர்ப்பாய ஆணையம் அமைக்கவும் இம்மசோதா வகை செய்கிறது என்று குறிப்பிட்ட அவர், இதன் தலைவராக ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி அல்லது ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நியமிக்கப்படுவார் என்றும் அவர் கூறினார்.

நீதிமன்ற நடைமுறைகளை எளிமைப்படுத்துவதோடு, உலகத்தரத்திலான நீதி கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விரைவாக நீதி கிடைக்கும் வகையில் நீதித்துறை வலுப்பெறும் என்றும் திரு அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கும் இம்மசோதா வலுசேர்க்கும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக, இந்த விவாதத்தின் மீது பேசிய பிஜேபி உறுப்பினர் திரு **Subhash Barala,** நீதி நிர்வாகத்தில் இந்த மசோதா பெரிய மாற்றங்களை கொண்டுவரும் என்று தெரிவித்தார்.

மத்திய அரசு மேற்கொண்ட **11** ஆண்டு முயற்சியின் பயனாக இம்மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திமுக உறுப்பினர் திரு. திருச்சி சிவா பேசுகையில், கடந்த **2021-**ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்ப்பாய சீர்திருத் மசோதாவுக்கு மாற்றாக புதிய மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின்பேரில் புதிய மசோதாவில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசிய தீர்ப்பாய ஆணையம் அமைக்கப்படுவதையும் தமது உரையில் திரு. திருச்சி சிவா குறிப்பிட்டார்.

அஇஅதிமுக உறுப்பினர் திரு இன்பதுரை, ஒய் எஸ் ஆர் காங்கிர கட்சியின் திரு எஸ். ரெட்டி, தெலுகு தேசம் கட்சியின் திரு பாஷ்யம் ராமகிருஷ்ணா உள்ளிட்டோரும் தீர்ப்பாய சீர்திருத்த மசோதா மீதான விவாத்தில் கலந்துகொண்டு பேசினர்.

<<<<<>>>>>>

எல் — நினோ வெப்ப தாக்கத்தால், பருவமழை குறைந்து வருவது குறித்து மத்திய அரசு தொடர்ந்து கண்காணித்து வருவதாக வேளாண் இணையமைச்சர் திரு. ராம்நாத் தாகூர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதுதொடர்பாக அவர் அளித்த எழுத்துப்பூர்வமான பதிலில், மழை குறைவதால் விவசாய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து இதனை களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறியுள்ளார்.

இந்திய வானிலை ஆய்வு மையத்துடன் பருவமழையில் ஏற்படும் மாற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**15** மாநிலங்களில் மாவட்ட அளவிலான எல்-நினோ பாதிப்பு நிவாரணத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இயல்பு நிலைக்கும் குறைவாக மழை பெய்துள்ள **342** மாவட்டங்கள் கண்டறியப்பட்டு, இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் அறிவுறுத்தலின்படி வெளியிடப்பட்டுள்ள நிலையான செயல்முறைகளை பின்பற்றுமாறு மாநில அரசுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேவையான விதைகள் கையிருப்பில் வைத்திருக்குமாறு மாநிலங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் திரு ராம்நாத் தாகூர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

அருணாச்சலப்பிரதேசம் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால், சீனா

உடனான எல்லைப்பகுதி குறித்து அந்நாட்டுடன் இந்தியா தொடர்ந்து பேசி வருவதாக கூறினார்.

அண்மையில் நடைபெற்ற 36-ஆவது இந்திய — சீன எல்லை குறித்த ஆலோசனைக் கூட்டத்திலும் இந்தியாவின் நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையே தூதரக ரீதியாகவும், ராணுவ அதிகாரிகள் நிலையிலும் எல்லைப்பகுதியில் அமைதியை பராமரிப்பது குறித்து பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

சீனா உரிமை கோரும் எந்தவொரு பகுதியும் அருணாச்சலப்பிரதேசத்தில் இல்லை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

பங்களாதேஷ் பிரதமர் திரு தாரிக் ரஹ்மான் இந்தியா வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும், இருதரப்பு உறவுகள் குறித்து அவருடன் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

புதுதில்லியில் நடைபெறும் பிரிக்ஸ் நாடுகள் கூட்டத்திலும் பங்களாதேஷ் பிரதமர் பங்கேற்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

பங்களாதேஷுக்கான இந்திய துணைத்தூதர், அந்நாட்டு பிரதமரை சந்தித்து பேசியுள்ளதாகவும், இருதரப்பு உறவுகள் மற்றும் முக்கியத்துவம்

வாய்ந்த விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தப்பட்டதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தில் தில்லி மாணவர் போராட்டம் தொடர்பான விவாதத்தில், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பங்கேற்க தொடர்ந்து மறுத்து வருவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்கள் போராட்டத்தின்போது தில்லி காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து மத்திய அரசு வெளிப்படையாக விவாதிக்க தயாராக உள்ள நிலையில், எதிர்க்கட்சிகள் விவாதத்தில் கலந்துகொள்ளாதது ஏற்புடையது அல்ல என்றும் கூறினார்.

எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளுக்கு உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா உரிய பதிலளிக்க தயாராக உள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் நடத்த விடாமல், காங்கிரஸ் மற்றும் எதிர்க்கட்சிகள் தடை செய்து வருவது கண்டிக்கத்தக்கது என்றும் திரு கிரண் ரிஜிஜூ கூறினார்.

<<<<<>>>>>>

கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவும், தன்னிறைவு பெற்ற கிராமங்களை உருவாக்கவும் மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கைவினைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களையும் சிறிய அளவிலான வர்த்தகத்தையும் மேம்படுத்தும் வகையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெறும் நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கிராம வங்கியின் சார்பில் சேலம் மாவட்டத்தில் உள்ள **36** கிளைகளை சேர்ந்த **250** பயனாளிகளுக்கு அரசின் கடனுதவி வழங்கப்பட்டது.

பிரதமரின் வேளாண்மை உள்கட்டமைப்புத் திட்டத்தின்மூலம் உரிய நேரத்தில் தமக்கு கடனுதவி கிடைத்ததாக சித்தனூர் பகுதியைச் சேர்ந்த கார்த்திகேயன் தெரிவித்தார்.

**(*Sound Byte — கார்த்திகேயன் — 23 Sec.)***

பிரதமரின் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்மூலம் **19** லட்ச ரூபாய் வழங்கப்பட்டதால் விவசாயத்தை விரிவுபடுத்தும் வாய்ப்பு கிடைத்துள்ளதாக விவசாயி தீபா தெரிவித்தார்.

***(Sound Byte — தீபா — 23 Sec.)***

<<<<<>>>>>>

பலுசிஸ்தான் சுதந்திரமடைந்துள்ளதை சர்வதேச சமுதாயம் அங்கீகரிக்க வேண்டும் என்று பலோச் அமைப்பின் தலைவர் திரு **Mir Yar Boloch** வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பலுசிஸ்தானின் சுதந்திர தினத்தை ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் **11**-ஆம் தேதியன்று நாட்டின் ஆறு கோடி மக்களும் கொண்டாடுவார்கள் என்று கூறியுள்ளார்.

பலுசிஸ்தான் மக்கள், சுதந்திர தின கொண்டாட்டத்தில் மகிழ்ச்சியாக இருப்பது மட்டும் போதாது என்றும், சர்வதேச சமுதாயத்தின் அங்கீகாரத்தை பெற வேண்டும் என்ற ஆவலோடு காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்ட ரீதியாகவும், அரசியல் மற்றும் தூதரக அளவிலும் பலுசிஸ்தானுக்கு அங்கீகாரம் தேவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐ நா உறுப்பு நாடுகள் ஆசியான், ஆப்பிரிக்க கூட்டமைப்பு மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலுசிஸ்தானின் சுதந்திரத்தை வெளிப்படையாக அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் சிறைகளில் கொடுமைகளை அனுபவித்து வரும் **50** ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலோச் மக்களை அந்நாடு உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் திரு **Mir Yar Boloch** கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

கஜகஸ்தான் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manas Dhamne** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-4, 7-6** என்ற செட் கணக்கில், யுக்ரைனின் **Vadym Ursu**-வை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Akanksha Dileep, Zeel Desai** ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், நெல்லை அணிக்கு எதிரான ஆட்டத்தில் திருச்சி அணி **45** ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

திண்டுக்கல்லில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் பேட் செய்த திருச்சி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 8 விக்கெட் இழப்பிற்கு 182 ரன் எடுத்தது.

பின்னர், 183 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய நெல்லை அணி 18 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 137 ரன் மட்டுமே எடுத்தது.

இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள கோவை அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற திருப்பூர் அணி முதலில் பந்து வீச தீர்மானித்துள்ளது.

<<<<<END>>>>>>